[2013 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 475, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**475—**

**சாலை வசதி**

***22780—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சி எலந்தவாரி மலைக் கிராமத்தில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், எலந்தவாரி மலைக் கிராமத்திற்குச் செல்ல ஜடையகவுண்டன் காப்புக் காட்டு அறிவிக்கையில் 2.70 மீட்டர் அகலத்திற்கு வழி உரிமம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலையின் நீளம் 1,428 மீ. ஆகும். ஜடையகவுண்டன் காப்புக் காட்டு அறிவிக்கையில், மேற்காணும் அனுமதி உரிமம் வழங்கப்பட்டுள்ள சாலையினை தார்ச் சாலை அல்லது கான்கிரீட் சாலையாக மாற்றவேண்டுமானால் அனுமதிக்கப்பட்ட அகலத்தினைவிட அதிக வன நிலம் தேவைப்படுகின்றது. இச்சாலையை மேம்படுத்த 1.00 எக்டேருக்குக் குறைவாகவே வன நிலம் தேவைப்படுகிறது. எனவே, பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறை அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வன நில உரிமைச் சட்டம் 2006-ன்படி மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் இடங்களுக்கு சாலையை மேம்படுத்த உரிய படிவத்தில் கருத்துரு அனுப்புகின்றபட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்தச் சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்

2013 மே 13]

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள் இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 476, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**476—**

**புறவழிச்சாலை**

***123—திரு. அ. நாஞ்சில் முருகேசன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகர்கோவில் மற்றும் சுசீந்திரம் நகரப் பகுதிகளில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நாகர்கோவில் மற்றும் சுசீந்திரம் நகரப் பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த புறவழிச்சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

**திரு. அ. நாஞ்சில் முருகேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு தமிழக மக்களுக்குக் கேட்காமலேயே கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் என்னுடைய நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட சுங்காங்கடை பகுதியில் சுமார் 30 வருஷ காலமாக பேருந்து சரியாகப் போகமுடியாத காரணத்தால், சுங்காங்கடையைச் சேர்ந்த பகுதியிலும், புத்தேரி, அக்காமரத்தட்டு, சுசீந்திரம் வழியாக அந்தப்*